செய்தி வெளியீடு எண் : 030 நாள் : 05.01.2023

**தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய பெரும்பாக்கம் திட்டப்பகுதிகளில் வசிக்கும் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகளுக்கான சான்றிதழ்கள் மற்றும் ஓட்டுநர் உரிமங்களை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன் அவர்கள் வழங்கினார்**

பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ. அன்பரசன் அவர்கள் இன்று (5.1.2023) இலகுரக ஒட்டுநர் பயிற்சி பெற்ற 81 நபர்களுக்கு ஒட்டுநர் உரிமம் மற்றும் அழகுக்கலை நிபுணர் பயிற்சி பெற்ற 30 நபர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார்.

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ. அன்பரசன் அவர்கள் பேசுகையில் ,தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு திட்டப்பகுதிகளில் வசிக்கும் இளைஞர்களின் வாழ்வாதாரத்திற்காக பல்வேறு திறன் பயிற்சிகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இலகுரக ஒட்டுநர் பயிற்சி, அழகுக்கலை நிபுணர், ஆயத்த ஆடைகள் தயாரிப்பு பயிற்சி, ஜெனரல் டூட்டி அஸிஸ்டென்ட் போன்ற பயிற்சிகள் 361 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் 183 நபர்களுக்கு கணிணி பயிற்சி, தையல் பயிற்சி, இரண்டு சக்கர வாகன பழுது பார்க்கும் பயிற்சி போன்ற 18 விதமான பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத்தவிர தொண்டு நிறுவனங்களின் மூலம் 22 விதமான பல்வேறு பயிற்சிகள் 1324 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் இந்த நிதியாண்டில் இதுவரை 1868 இளைஞர்கள் திறன் வளர்ப்பு பயிற்சியில் பயனடைந்துள்ளனர். தற்பொழுது 107 நபர்கள் நான்கு விதமான பயிற்சிகளில்

பயின்று வருகின்றனர். மேலும் பல்வேறு பிரிவுகளில் திறன் வளர்ப்பு பயிற்சிகள் பெற 6358 நபர்கள் வாரிய திட்டப்பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளனர்.

சென்னை தரமணியிலுள்ள சாலை போக்குவரத்து நிறுவனத்தால் இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி 30 நாள்களுக்கு வழங்கப்பட்டு, அப்பயிற்சியில் தேர்ச்சி பெற்ற 81 நபர்களுக்கு ஓட்டுநர் உரிமம் மற்றும் அழகுக்கலை நிபுணர் பயிற்சி பெற்ற 30 நபர்களுக்கு மாண்புமிகு குறு, சிறு (ம) நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் சான்றிதழ் வழங்கப்படுகிறது. பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு, அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் பெற இப்பயிற்சி வழிவகை செய்கின்றது.

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலர் செல்வி அபூர்வா இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப., சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.அரவிந்த் ரமேஷ், வாரிய தலைமை பொறியாளர் திரு.ச.சுந்தரராஜன் வாரிய மேற்பார்வை பொறியாளர் திருமதி. மாலா, வாரிய நிர்வாக பொறியாளர் திரு.சிவசங்கரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in